ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# பொங்கும் பரிவு

மணவாள மாமுனிகளின் உபதேசரத்தினமாலயில் 18ம் பாசுரம்:

> மங்களாசாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்
> தங்கள் ஆர்வத்தளவு தானன்றி - பொங்கும்
> பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்
> பெரியாழ்வார் என்னும் பெயர்

இதில் சொல்லப்பட்ட பொங்கும் பரிவு ஆழ்வாருடையது என்பது தெளிவு.

ஆனாலும் இப்பொங்கும் பரிவு ஆழ்வாருடையது மட்டும் தானா, இல்லை இது எம்பெருமானுடையதுமா என்று பார்க்கில் - இருவருக்கும் உண்டு என்பது தெரிகிறது.

இவ்விரண்டில் எம்பெருமானுடைய பொங்கும் பரிவு ஆழ்வாருடைய பொங்கும் பரிவைக் காட்டிலும் உயர்ந்தது என்று மேலெழப் பார்க்கில் தோன்றும்.

எப்படி என்னில் - ஆழ்வாருடையது பொங்கும் பரிவு தான்; ஆனாலும் அதுவும் அவனது இன்னருளே, என்பதால்.

எதனாலே அவ்வருள் அவனிடத்திலிருந்து உண்டாயிற்று என்று பார்க்கில், அது அவனுடைய பொங்கும் பரிவாலே வந்தது என்றே கொள்ள வேண்டும்.

ஆக, அவனுடைய பொங்கும் பரிவு உண்டாக்கும் பரிவு என்றும் ஆழ்வாருடையது உண்டாகிய பரிவு என்றுமாயிற்று. உண்டாகியதைக் காட்டிலும் அதை உண்டாக்கியதே உயர்ந்தது எனத் தோன்றும்.

ஆனால், உள்நோக்கிப் பார்க்கில் -

விளைத்தது பெரிதா, விளைந்தது பெரிதா என்ற கேள்வி எழுகிறது.

இங்கே விளைத்த நிலம் என்ன, விளைந்த நிலம் என்ன, என்று பார்க்க வேண்டும்.

விளைத்த நிலமோ கருணையே வடிவெடுத்தது. விளைந்த நிலமோ கல்லினும் கடியது.

கருணை உள்ளத்தில் பரிவு உண்டாவது விசேஷமா; அல்லது கல் உள்ளத்தில் பரிவு உண்டாவது விசேஷமா என்றால் - கல் போன்ற ஜீவனின் இதயத்தில் பரிவு உண்டாவதே விசேஷம்.

மேலும் இவன் முகத்தையே பார்த்திருக்கும் அவனிடத்தில் பரிவு உண்டாவது என்றொன்றில்லை. அது என்றுமே உள்ளது. இத்தலையிலோ - அநாதி காலமாக இல்லாத ஒன்று புதிதாக உருவாகி உள்ளது.

ஆகவே, ஆழ்வார் உள்ளத்திலே உண்டாகிய பொங்கும் பரிவே உயர்ந்தது என்பதும், எனவே தான் இது மாமுனிகள் திருவாக்கினாலே கொண்டாடப்பட்டது என்பதும் விளக்கப்பெற்றதாயிற்று.

**பெரியாழ்வார் திருவடிகளே ஶரணம்**